# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1844/71 - 2014 ජනවාරි මස 10 වැනි සිකුරාදා - 2014.01.10

*1844/71 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியச் சட்டம்***

*3 (6) (அ) மற்றும் (ஆ) விதிமுறைகளின் கீழான கட்டளை*

*2001 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியச் சட்டத்தின் 3 (6) (அ) மற்றும் (ஆ) விதிமுறைகளின் கீழ் என்னிடத்தே கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இறுதியாக இன்னுமொரு முறை மட்டும் விருப்பினைத் தெரிவிப்பதற்கான கால எல்லையினை நீடிப்பதற்கு அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன ஆகிய என்னால், கீழ்வரும் விதிமுறைகளின் கீழ் இத்தால் கட்டளையிடப்படுகின்றது.*

1. *1983.08.01 ஆந் திகதிக்கு முன்னர் அரசசேவையில் நியமனம் பெற்று அத்திகதியில் சேவையினில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களினால் இவ் ஓய்வூதியத் திட்டத்திற்கான விருப்பினைத் தெரிவிக்கத் தீர்மானிக்க இயல்வது எத்திகதிக்கு முன்னரோ, அத்திகதி 2014.12.31 எனவும் ;*

2. *உத்தியோகத்தர் ஓய்வு பெற்றிருப்பின் அறவிடப்படவேண்டிய நிலுவைப் பங்களிப்புத் தொகை மற்றும் வட்டி என்பன ஒரே தடவையில் செலுத்தப்படல் வேண்டுமெனவும், அது, ஓய்வூதியச் சுற்றுநிருபம் 03/ 2008 இற்கு அமைவாதல் வேண்டுமெனவும் ;*

3. *உத்தியோகத்தர் உயிரிழந்திருப்பின் குறித்த பங்களிப்புத்தொகை மற்றும் வட்டி என்பன கொடையிலிருந்து ஒரே தடவையில் அறவிடப்படல் வேண்டுமெனவும், உத்தியோகத்தர் கடமையில் ஈடுபட்டுள்ளவராயின் அவர் ஓய்வுபெற முன்னர் மொத்தப் பங்களிப்புத்தொகை மற்றும் வட்டி என்பன அறவிடப்படுதல் வேண்டுமெனவும் கட்டளையிடுகின்றேன். மேலும் இக்கட்டளைகள் இலங்கைப் பிரசாவுரிமையினைக் கொண்டவர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்படுகின்றன எனத் தொடர்ந்தும் கட்டளையிடுகின்றேன்.*

*டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன,*
*அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள்*
*அமைச்சர்.*

*அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,*
*சுதந்திர சதுக்கம்,*
*கொழும்பு 07*
*2013, திசெம்பர் 31.*

*1- 754/1*

**1953 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதியச் சட்டம்**

5அ விதிமுறையின் கீழான கட்டளை

2008 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1953 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய (திருத்தம்) சட்டத்தின் 5அ விதிமுறையின் கீழ் என்னிடத்தே கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், இறுதியாக இன்னுமொரு முறை மட்டும் தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு விருப்பினைத் தெரிவிப்பதற்கான காலஎல்லையினை நீடிப்பதற்கு அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன ஆகிய என்னால் கீழ்வரும் விதிமுறைகளின் கீழ் இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

1. 1983.08.01 ஆந் திகதிக்கு முன்னர், பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதியச் சட்டத்தினால் உள்வாங்கப்படும் பாடசாலைகளில் நியமனம் பெற்று, அத்திகதியில் சேவையினில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களினால் இவ் ஓய்வூதியத் திட்டத்திற்கான விருப்பினைத் தெரிவிக்கத் தீர்மானிக்க இயல்வது எத்திகதிக்கு முன்னரோ, அத்திகதி 2014.12.31 எனவும் ;

2. உத்தியோகத்தர் ஓய்வு பெற்றிருப்பின் அறவிடப்படவேண்டிய நிலுவைப் பங்களிப்புத் தொகை மற்றும் வட்டி என்பன ஒரே தடவையில் செலுத்தப்படல் வேண்டுமெனவும், அது, ஓய்வூதியச் சுற்றுநிருபம் 03/2008 இற்கு அமைவாதல் வேண்டுமெனவும் ;

3. உத்தியோகத்தர் உயிரிழந்திருப்பின் குறித்த பங்களிப்புத்தொகை மற்றும் வட்டி என்பன கொடையிலிருந்து ஒரே தடவையில் அறவிடப்படல் வேண்டுமெனவும், உத்தியோகத்தர் கடமையில் ஈடுபட்டுள்ளவராயின் அவர் ஓய்வுபெற முன்னர் மொத்தப் பங்களிப்புத்தொகை மற்றும் வட்டி என்பன அறவிடப்படுதல் வேண்டுமெனவும் கட்டளையிடுகின்றேன். மேலும் இக்கட்டளைகள் இலங்கைப் பிரசாவுரிமையினைக் கொண்டவர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்படுகின்றன எனத் தொடர்ந்தும் கட்டளையிடுகின்றேன்.

டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன,
அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள்
அமைச்சர்.

அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2013, திசெம்பர் 31.

1-754/2

---

**2010 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியச் (திருத்தங்கள்) சட்டம்**

10 ஆம் விதிமுறையின் கீழான கட்டளை

மேற்குறித்த திருத்தச் சட்டத்தின் விதிமுறைகளின்படி, 2010, ஒகத்து மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னரான குறித்த நிகழ்வுகள் தொடர்பில் உரிமைகோரும் திகதி 2014.12.31 என இத்தால் கட்டளையிடுகின்றேன்.

இக்கட்டளை 1970 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, விதவைகள் அனாதைகள் (ஆயுதப் படைகள்) சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் தொடர்பிலும் ஏற்புடையதாகும்.

டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன,
அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள்
அமைச்சர்.

அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2013, திசெம்பர் 31.

1-754/3

**2010 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தபுதாரர் மற்றும் அனாதைகள் ஒய்வூதிய நிதியச் (திருத்தங்கள்) சட்டம்**

*9 ஆம் விதிமுறையின் கீழான கட்டளை*

*மேற்குறித்த திருத்தச் சட்டத்தின் விதிமுறைகளின்படி, 2010, ஒகத்து மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னரான குறித்த நிகழ்வுகள் தொடர்பில் உரிமைகோரும் திகதி 2014.12.31 என இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

*இக்கட்டளை 1998 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, தபுதாரர் மற்றும் அனாதைகள் (ஆயுதப் படைகள்) சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் தொடர்பிலும் ஏற்புடையதாகும்.*

*டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன,*
*அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள்*
*அமைச்சர்.*

*அரச நிர்வாக றம்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,*
*சுதந்திர சதுக்கம்,*
*கொழும்பு 07,*
*2013, திசெம்பர் 31.*

*1- 754/4*